அறிவித்தல்

தேர்தல் ஆணைக்குழு 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேல்தல்கள் சட்டத்தின் பிரிவு 7(4) (அ)இன் கீழான அறிவித்தல்

01. 2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள்(திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 7(4)(அ) இன் பிரகாரம் தேர்தல்கள் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியாகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் 2025.02.28 ஆந் திகதியிலிருந்து 2025.03.28 ஆந் திகதி பி.ப. 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். உரிய விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபால் அனுப்பி வைக்கவோ, குறித்த கட்சி செயலாளர் நேரில் வந்து தேரதல் ஆணைக்குழுவிற்கு கையளிக்வோ முடியும். ஆந்த விண்ணப்படிவங்களை அனுப்பிவைக்கும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசியல் கட்சிகளாக அங்கீகரிக்கப்படுவதற்கான விண்ணப்பப்படிவம் 2025" என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களைள் தவிசாளர் தேர்தல் ஆணைக்குழு, தேர்தல்கள் செயலகம் சரண மாவத்தை, இராஜகிரிய (10107) என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

02. விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதி நாளில் குறித்த நேரத்திற்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது.

03. ஓர் அரசியல் கட்சியாக கணிக்கப்படுவதற்காக கோரும் விண்ணப்பப்படிவத்தை கட்சிச் செயலாளர் கையொப்பமிட்டு ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

04. விண்ணப்பப்படிவத்தை தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து (www.elections.gov.lk) பதிவிறக்கம் செய்து கொள்ள முடியுமென்பதோடு, மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள் மூலமும் தேர்தல்கள் செயகத்திலிருந்தும் உரிய விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

05. கட்சி ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து 2404/64 ஆம் இலக்க 2024.10.04 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் காணப்படும் அனுமதிக்கப்பட்ட(ஆ) அட்டவணையிலுள்ள சின்னங்களுள் எந்தச் சின்னத்தை அக்கட்சிக்கு குறித்தொதுக்கிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதென்பதை அவ்விண்ணப்பத்தில் குறித்துரைத்தல் வேண்டும்.

06. விண்ணப்பப்படிவத்துடன் கீழ்காணும் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்திய நிழற்படப் பிரதிகளை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும். தேவைப்படுமிடத்து மூலப் பிரதிகள் பரீட்சித்துப் பார்க்கப்படும.

I. கட்சியின் யாப்பு

II. கட்சியின் பதவிதாங்குநர்களின் குழுவிற்கு குறைந்த பட்சம் பெண் அலுவலர் ஒருவரையேனும் உள்ளடக்குவதில் கவனம் செலுத்தல் வேண்டும்.

III. கட்சியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்கள்.(விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் திகதிக்கு அண்மையிலான நாலாண்டுக்கான)

IV. கட்சியின் நிகழ்கால கொள்கைப் பிரகடனம்

V. தொடர்ந்தேர்ச்சியாக ஓர் அரசியல் கட்சியாக அண்மைய நாலாண்டு காலத்துக்குள் இயங்கியுள்ளதென்பதை நிருபிப்பதற்காக சமர்ப்பிக்கப்படக்கூடிய அனைத்து எழுத்தாவணங்கள் மற்றும் அது தொடர்பான ஓர் அறிக்கை.

07. அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியாக் கணிக்கப்படுவதற்காக செய்யப்படும் ஒரு விண்ணப்பம் தொடர்பில் 2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 7 (5),(6),(7) ஆகியவற்றின் கட்டளைகள் இறுதியானதும் அறுதியானதுமாகும்

08. விண்ணப்பப்படிவங்களை கையளிக்கும் போது 2263/23 ஆம் இலக்க 2022.01.21 ஆந் திகதிய அரசியல் கட்சிகளின் பதிவு சம்பந்தமான வர்த்தமானி பத்திரத்தில் குறித்துள்ள அளவுகோல்களின் பிரகாரம் செயற்பட்டுள்ளதென உறுதிப்படுத்தல் வேண்டும்.

ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க
தவிசாளர்
தேர்தல்கள் ஆணைக்குழு.

தேர்தல்கள் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,

சரண மாவத்தை,

இராஜகிரிய(10107)

2025 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி

குறிப்பு : இது சம்பந்தமாக 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பரிசீலிக்கலாம்.